# தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தேர்வுநிலைப் பேரூராட்சி
# ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

**ந.க.எண். 361 /2010/அ1/** **நாள்.24.06. 2010**

பென்னாகரம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 2010—11ம் ஆண்டில் **பகுதி —2— திட்டத்தின்** கீழ் பணியினை செய்வதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து 15.07.2010 ம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் (இவ்வலுவலக கடிகார நேரப்படி) செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 03.30 மணியளவில் வருகை புரிந்து இருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். எதிர்பாராத சூழ்நிலையில் ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் அரசு விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால் அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு திறக்கப்படும்.

## பகுதி —2— திட்டம் 2010—2011

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | முன்வைப்பு ரூ.தொகை | ஒப்பந்தப்புள்ளி படிவம் | | | வேலை முடிக்க வேண்டிய காலம் (மழைகாலம் உட்பட) | ஒப்பந்த தாரரின் தகுதி (புதிய வகுப்பில்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | விலை ரூ | மதிப்பு கூட்டுவரி | மொத்தம் | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | பென்னாகரம் பேரூராட்சிக்கு சொந்தமான பேரூந்து நிலையத்தில் சிமெண்ட் தளம் அமைத்தல். | **15.00** | 30000 | 6000 | 720 | 6720 | 3மாதம் | நான்காம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் |

மேற்கண்ட பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிப் படிவங்கள் பேரூராட்சி அலுவலகத்தில் அதற்குண்டான தொகையை மேற்கண்ட அட்டவணையில் கலம் எண்.7 ல் கண்டுள்ளவாறு ரொக்கமாக செலுத்தி (திருப்பி தரத்தக்கதல்ல) 24.06.2010ம் தேதி முதல் 14.07.2010 பிற்பகல் 03.00 மணிக்குள் பெற்றுக்கெள்ளலாம். அஞ்சல் வழியாக பெற விருப்பம் உள்ளவர்கள் கூடுதலாகரூ.500/—க்கானவங்கி கேட்பு வரைவோலை (டி.டி) செயல் அலுவலர், பென்னாகரம் பேரூராட்சி அவர்களால் மாற்றப்படதக்க வகையில் அனுப்பி வைத்தால் ஒப்பந்தப்புள்ளி படிவம் பதிவு அஞ்சலில் (அ) துரித அஞ்சலில் அனுப்பி வைக்கப்படும். ஆனால் அவைகள் தாமதமாகவோ, கிடைக்காமல் போனாலோ செயல் அலுவலர், பென்னாகரம் பேரூராட்சி அவர்கள் பொறுப்பேற்க மாட்டார். ஒப்பந்தப்புள்ளி டேவணித்தொகையை பேரூராட்சி அலுவலகத்தில் ரொக்கமாக செலுத்தப்பட வேண்டும்.

## நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் அலுவலக நேரங்களில் , அலுவலக நாட்களில் நேரில் பெற்றுக் கொள்ளலாம். பேரூராட்சி அலுவலகத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவம் கிரயத் தொகை 14.07.2010 ந் தேதிக்குள் செலுத்தி நேரில் பெற்றுக் கொள்ளலாம்.
2. ஒப்பந்தப் புள்ளிகளை ஏற்றுக் கொள்ளவோ அல்லது மறுக்கவோ, நிராகரிக்கவோ செயல் அலுவலா் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு.
3. ஒப்பந்தப்புள்ளி கோருபவர் இந்த அலுவலகத்தின் பதிவு பெற்ற ஒப்பந்ததாராக இருக்கவேண்டும்.
4. கட்டிடங்கள் கட்டுவதற்கான ஒப்பந்தபுள்ளி கோருபவர் அதே அளவு (அ)அதைவிட அதிக மதிப்புடைய பணியை பேரூராட்சி துறை (அ)வேறு அரசு துறைகளிலோ செய்து முடித்ததற்கான சான்றினை இணைத்தால் மட்டுமே ஒப்பந்தபுள்ளி பரிசீலிக்கப்படும்.

5. அஞ்சல் மூலம் அனுப்பப்படும் ஒப்பந்தப்புள்ளி குறித்த நேரத்தில் அடியில் கையொப்பம் இட்டவருக்கு சேராவிட்டால் அல்லது நேரம் கழித்து கிடைத்தாலோ அதற்கு அடியில் கையொப்பமிட்டவர் பொறுப்பல்ல.

6. டேவணித் தொகை அலுவலகத்தில் ரொக்கமாக செலுத்தி அதற்குரிய செலுத்துச் சீட்டை (அசல் ) இணைக்கப்பட வேண்டும்.

7. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் செயல் அலுவலரோ அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவராலோ திறந்து பரிசீலிக்கப்படும்.

8. ஒப்பந்ததாரர் வேலை உத்திரவு கிடைக்கப் பெற்ற மூன்று நாட்களுக்குள்ரூ.20/– மதிப்புள்ள முத்திரைதாளில் உரிய ஒப்பந்தப் பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும் வேலை உத்திரவில் குறிப்பிடும் தேதிக்குள் வேலை முடிக்கப்பட வேண்டும்.

9. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் 14 .07.2010 ந் தேதி பிற்பகல் 3.00 மணி வரைதான் ( அலுவலக கடிகாரத்தின் படி ) விற்பனை செய்யப்படும்.

10. குறிப்பிட்ட காரணங்கள் இல்லாமல் பொதுவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் குறைந்த தொகை குறிப்பிடும் ஒப்பந்ததாரருக்கு வேலையை ஒப்படைக்கப்படும் , ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் மன்ற அங்கீகாரத்திற்கு உட்பட்டது ஆகும் .

11. ஒப்பந்தப்புள்ளி தேதி மற்றும் நேரம் மாற்றியமைக்கும் அதிகாரம் செயல் அலுவலருக்கு உண்டு.

12. ஒப்பந்ததாரர் 2009–10 ம் ஆண்டிற்கு 31 .3.2009 முடிய விற்பனை வரி, வருமானவரி ஆகியவை செலுத்தியிருக்கும் ஆவணங்களை இவ்வலுவலகத்தில் செலுத்தி ஒப்பந்தம் புதுப்பித்து இருக்க வேண்டும்.

13. பணிகளுக்கு முன்பணம் ஏதும் வழங்கப்பட மாட்டாது.

14.இதர நிபந்தனைகளை அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் தெரிந்துக் கொள்ளலாம்.

15. குறிப்பிட்ட காலத்தில் பணியினை முடிக்காவிடில் கீழ்கண்டவாறு அபராதம் விதிக்கப்படும்.

| | |
|---|---|
| 15 நாட்களுக்கு வரை | : ஒப்பந்த மதிப்பில் 1% |
| 15 நாட்களுக்கு மேற்பட்டால் | : ஒப்பந்த மதிப்பில் 3 % |
| 30 நாட்களுக்கு மேற்பட்டால் | : ஒப்பந்த மதிப்பில் 5% |
| 45 நாட்களுக்கு மேற்பட்டால் | : ஒப்பந்ததாரர் பதிவு நீக்கம் செய்யப்படும். |

16. ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு பணி ஆணை வழங்கும் போது மதிப்பீட்டிற்கு 0.3 சதவீதத்தொகையை கட்டிட தொழிலாளர் நல நிதிக்கு வங்கி வரைவோலை எடுத்து அளிக்கவேண்டும்.

17. பட்டியல் தொகையில் வருமானவரி 2% வருமானவரிக்கு மேல்வரி 10% கல்வி வரி 3% விற்பனைவரி 2% மேல்வரி 15% தொகை பிடித்தம் செய்யப்படும்.

## ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனைகள்

1. Engineering Manual for urban local bodies in Tamilnadu ல் கண்டுள்ள அனைத்து நடைமுறைகளும் பின்பற்றப்படவேண்டும்.
2. பணிகளை ஒப்பந்தக் காலத்திற்குள் முடிக்கப்படவேண்டும்.
3. Quality Assurance manual படி பணிகளை மேற்கொள்ளப்படவேண்டும்.
4. ஒப்பந்ததாரர்கள் நியாயமற்ற காரணத்தினால் பணியினை முழுமையாக முடிக்கப்படாவிட்டாலும் வேண்டுமென்றே கால நீட்டிப்பு செய்து பணியினை செய்யாமல் காலதாமதப்படுத்தினாலும் தரமற்ற பொருட்களை கொண்டு தரமற்ற பணிகளை மேற்கொண்டால் பணிக்கான ஒப்பந்ததாரர் மீது துறைபூர்வ நடவடிக்கை எடுத்து ஒப்பந்ததாரரை கருப்புப்பட்டியலில் (Black List) சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உயர் அலுவலர்களுக்கு மந்தன அறிக்கை அனுப்பப்படும்.
5. ஒப்பந்ததாரர் சார்பாக ஒப்பந்தப்பணிகளை கவனிக்க கையொப்பமிட அதிகாரம் பெற்ற நபர் நியமனம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

6. அரசு அலுவலர்கள் மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு நெருங்கிய உறவினர்கள் ஒப்பந்ததாரராக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் சம்மந்தப்பட்ட ஒப்பந்தக்காரர் மீது துறைபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும்.
7. சிமெண்ட் கலவை வேலைத்தளத்தில் தயார் செய்யும் போது 50 கிலோ சிமெண்ட் எடைக்கு உட்பட்ட அளவீட்டின்படியும் 50கிலோ ஜல்லி எடைக்கு உட்பட்ட அளவீட்டின் படியுடன் 50 கிலோ ஜல்லி எடைக்கு உட்பட்ட அளவீட்டின்படி கைபிடியுடன் கூடிய மரபெட்டிகளை ஒப்பந்தக்காரரின் சொந்த செலவில் வேலைத்தளத்தில் வைத்து அதன்படி உரிய விகிதாச்சாரத்தில் கலவைகள் கலந்து பணிக்கு பயன்படுத்தப்படவேண்டும் மிக்சர் மிஷின் தன்மைக்கு ஏற்ப எடை அளவீட்டின்படி உதவி செயற்பொறியாளரின் அனுமதி பெற்று மரப்பெட்டிகள் தயாரித்து பணியினை மேற்கொள்ளப்படவேண்டும்.
8. பணியினை ஆரம்பிக்கும் போதும் முன்னேற்றத்தில் உள்ள போதும் பணியினை முடிக்கும் போதும் ஒரே பகுதியில் புகைப்படம் எடுத்து மூன்று பிரதிகள் ஒப்பந்ததாரரின் சொந்த பொறுப்பில் சமர்ப்பிக்கப்படவேண்டும். ஒரு பிரதி ஒப்பந்தததாரரின் பொறுப்பில் பேரூராட்சி நிர்வாகம் கோரும் எந்த நேரத்திலும் எந்தநிலையிலும் புகைப்படம் பிரதி ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்படவேண்டும்.
9. பணியினை முழுமையாக முடித்த பின்னரே இறுதிப்பட்டியல் வழங்கப்படும் அதிகபட்சம் முதல் மற்றும் இறுதிபட்டியலாக ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படும் தவிர்க்க முடியாத நேரத்தில் ஒப்பந்ததாரரின் விண்ணப்பதின் பேரில் இளநிலைப் பொறியாளரால் பகுதிப்பட்டியல் நிர்வாக அலுவலரின் பரிந்துரையின் பேரில் வழங்கப்படும்.
10. இறுதிப்பட்டியல் ஒப்பந்தக்காரர் பணிக்கான பொருட்களின் தர சான்றிதழ் கான்கிரீட் இரும்பு கம்பிகள் சிமெண்ட்க்கான சோதனை சான்றிதழ் ஒப்பந்தக்காரரின் பொறுப்பில் நிர்வாக அலுவலரிடம் கடிதம் பெற்று தரபரிசோதனை சான்றிதழினை சமர்ப்பிக்கப்படவேண்டும்.
11. பணி ஐ.எஸ்.ஐ படி மேற்கொள்ளப்படவேண்டும்.

(ஒம்.) திரு இரா.முருகன்,எம். ஏ.,
தலைவர்

(ஒம். ) திரு.ஏ.முகமதுஹனீபா,
செயல்அலுவலர்

தேர்வுநிலைப் பேரூராட்சி
பென்னாகரம் (தர்மபுரி மாவட்டம்).

**<u>பெறுதல்</u>**

அனைத்து ஒப்பந்ததாரர்கள்
தேர்வுநிலை பேரூராட்சி , பென்னாகரம்.

**<u>நகல்</u>**

1. பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட ஆட்சியரகம், தருமபுரி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. பேரூராட்சிகள் உதவி இயக்குநர் தருமபுரி மண்டலம் மாவட்ட ஆட்சியரகம், தருமபுரி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
4. உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள் தருமபுரி.
5. பேரூராட்சிகள் இளநிலைப் பொறியாளர், பாலக்கோடு.
6. அலுவலக அறிவிப்பு பலகை விளம்பரம் செய்யும் பொருட்டு.